பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 07 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஆஸ்திரியாவுக்கு தாம் மேற்கொண்ட பயணம் வராற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. மத்திய பட்ஜெட் தொடர்பாக இந்திய பொருளாதார நிபுணர்களை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லியில் சந்தித்து விவாதிக்கிறார்.
3. மருத்துவக் கல்லூரிகளாக தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளுக்கும் அரசின் நிதி உதவி தொடர்ந்து வழங்கப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.
4. வங்கக்கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.
5. யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ரஷ்யா மற்றும் ஆஸ்த்திரியா பயணங்களை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி வியன்னாவிலிருந்து புதுதில்லி புறப்பட்டார்.

ஆஸ்திரியாவின் தமது பயணம் வராற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் தமது சமூக வலைதள பதவில் தெரிவித்துள்ளார்

இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவு மேலும் வலுப்பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

வியன்னாவில் இருந்தபோது பல்வேறு நிகழ்ச்சிகளில் தாம் பங்கேற்றதாகவும், இதற்குக் காணமாக இருந்த அந்நாட்டு அதிபர் திரு கால் நெக்மருக்கும், ஆஸ்திரிய மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஆஸ்திரிய வரலாற்றாளர்களை திரு நரேந்திரமோடி சந்தித்து உரையாடினார்.

இந்திய வரலாற்றையும், கலாச்சாரத்தையும் உலகம் முழுவதும் பரப்பி வரும் அவர்களது பணியை தாம் பாராட்டியதாகவும் அவர் கூறியுள்ளார்.

குவாண்டம் அறிவியலில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஆண்டன் **Zeilingr** –ஐயும் பிரதமர் சந்தித்து உரையாடினார்.

குவாண்டம் துறையில் இந்தியா அடைந்து வரும் முன்னேற்றம் குறித்து அப்போது பிரதமர் அவரிடம் எடுத்துரைத்தார்.

ஆஸ்திரியாவில் உள்ள இந்திய வம்சாவளியினரை சந்தித்து கலந்துரையாடிய திரு நரேந்திரமோடி இரு நாடுகளுக்கு இடையேயான அதிகாரப்பூர்வமான உறவுகளை வலுப்படுத்துவது, இருநாட்டு மக்களின் பங்களிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

புவியியல் ரீதியாக இந்தியாவும் - ஆஸ்திரியாவும் வேறு வேறாக இருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒற்றுமைகள் இருப்பதாக அப்போது அவர் தெரிவித்தார்.

சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் மற்றும் பல்வேறு கலாச்சாரங்களை இரு நாடுகளும் கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் 65 கோடி மக்கள் வாக்களித்திருப்பதாகவும், இது இந்தியாவின் ஜனநாயகத்தை உலகிற்கு பறைசாற்றுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா அமைதியையும், வளர்ச்சியையுமே எப்போதும் விரும்புவதாகவும், 41 ஆண்டுகளுக்கு பின் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியா வருகை தந்துள்ளது இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்தும் என்று திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா வளர்ச்சி பெற்று வருவதாகவும், உலகின் வளர்ச்சிக்கு இந்தியா முக்கிய பங்காற்றி, உலக நாடுகளின் நண்பனாக திகழ்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்திய – ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையேயான உறவு, தீவிரவாதம், ரஷ்ய – உக்ரைன் இடையேயான போர் ஆகியவை குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி அதிபர் திரு கால் நெக்மரிடம் உரையாடியதாக வெளியுறவுத்துறை செயலர் திரு வினய் மோகன் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

வியன்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகளாவிய தீவிரவாதம், சைபர் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் சவால்கள், பாகிஸ்தானிலிருந்து இந்திய எல்லைப் பகுதிகளில் ஊடுருவிவரும் தீவிரவாதிகள் குறித்து இரு தலைவர்கள் விவாதித்ததாகவும் கூறினார்.

இந்திய – ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையேயான நல்லுறவு காரணமாக உலகப் பொருளாதாரம் வளர்ச்சி பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா – உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போரை நிறுத்துவதற்கு அரசியல் ரீதியிலான பேச்சவார்த்தை மிகவும் அவசியம் என்று பிரதமர் ஆஸ்திரிய அதிபரிடம் வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தைக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் பிரதமர் கூறியதாக வெளியுறவுத்துறை செயலர் கூறினார்.

இந்திய – ஆஸ்திரியா நாடுகளுக்கு இடையேயான ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் உரையாடியதாகவும் திரு வினய் மோகன் குவாத்ரா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில் பிரதமர் திரு நரேந்திரமோடி புதுதில்லியில் இன்று இந்திய பொருளாதார நிபுணர்களை சந்தித்து பேசுகிறார்.

நிதி ஆயோக்கின் துணைத் தலைவர் திரு சுமன் பெர்ரி-யுடன் இணைந்து பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 22-ஆம் தேதி தொடங்குகிறது.

23-ஆம் தேதி மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் 2024-25-ஆம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

**[]<<<>>>[]**

வங்கக்கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்த கூட்டத்திற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் தலைமைவகிக்கிறார்.

இந்த கூட்டத்தில் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பாதுகாப்பு, தகவல் தொடர்பு, வர்த்தகம், முதலீடு ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகிறது,

கடந்த ஆண்டு ஜூலை மாதம் பாங்காக்கில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த வங்கக்கடல் நாடுகளின் கூட்டமைப்பில் தெற்காசியாவைச் சேர்ந்த ஏழு நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

[]<<<>>>[]

உயிரி தொழில்நுட்ப துறையின் மூலம் சுமார் 140 பில்லியன் டாலர் வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.,

அமெரிக்க - இந்திய வர்த்தகக் கவுன்சிலின் தூதுக்குழு செயல் துணைத்தலைவர் திரு எட்வர்ட் நைட்- புதுதில்லியில் தம்மை சந்தித்தபோது திரு ஜிதேந்திரசிங் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் உயிரி தொழில்நுட்பத்துறையில் நான்காயிரத்துக்கும் அதிகமான நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியா குவாண்டம் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் முன்னேற்றமடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையேயான ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாகவும், எரிசக்தி, பசுமை தொழில்நுட்பம் ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையே கூட்டு தொழில் திட்டங்களை செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டில் மாவட்ட தலைநகரங்களில் உள்ள மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகளாக மாற்றப்படும்போது மத்திய அரசின் நிதி உதவி தொடர்ந்து வழங்கப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திரு அபூர்வ சந்திரா, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நாட்டில் உள்ள 157 மருத்துவமனைகளில், 108 மருத்துவக் கல்லூரிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

2024-ஆம் ஆண்டு முதல் மருத்துவமனைகள் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருவதாகவும், இதற்கான மத்திய அரசின் நிதி தடையின்றி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 706 மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருவதாகவும் திரு அபூர்வசந்திரா கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு உட்பட ஏழு மாநிலங்களைச் சேர்ந்த 13 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்ற இடைத்தேர்தலில் அதிகபட்சமாக தமிழகத்தின் விக்கிவாண்டி தொகுதியில் 82 புள்ளி நான்கு எட்டு சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதற்கு அடுத்தபடியாக இமாச்சல பிரதேசத்தில் உள்ள நலங்காக் தொகுதியில் 79 புள்ளி பூஜ்ஜியம் ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

மத்திய பிரதேச மாநிலம் அமர்வாரா தொகுதியில் 78 புள்ளி ஏழு ஒன்று சதவீதம் பதிவாகியுள்ளது.

பஞ்சாப் மாநிலம் மேற்கு ஜலந்தர் தொகுதியில் குறைந்த அளவாக 51 புள்ளி மூன்று சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

ரயில் ஓட்டுநர்களின் நலனுக்காக கடந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ரயில் ஓட்டுநர் அறைகள் சிறந்த இருக்கைகளுடன் குளிரூட்டப்பட்ட அறைகளாக மாற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ரயில் ஓட்டுநர்களின் பணி நேரம் எட்டு மணி நேரத்திற்கும் குறைவாகவே இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்படுவதாகவும், கூடுதலான பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருவதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூளியுள்ளார்.,

**[]<<<>>>[]**

மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் உள்ளிட்ட துறைகளில் 2024-ஆம் ஆண்டிற்கான தேசிய கோபால் ரத்னா விருதுக்கான பரிந்துரைகள் வரவேற்கப்படுவதாக இதற்கான மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை **awards.gov.in** மஎன்ற இணையதளம் மூலம் வரும் 15-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 31-ஆம் தேதி விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள், கூட்டுறவு சங்கங்கள், வேளாண் உற்பத்தி அமைப்புகள், செயற்கை கருவூட்டல் வல்லுநர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தேசிய பால்வள தினமான நவம்பர் 26-ஆம் தேதி இந்த விருதுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலத்தில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் வெள்ளம் பாதித்த பகுதிகளை இன்றும் பார்வையிடுகிறார்.

நேபாளையொட்டி பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக அப்பகுதிகளில் உள்ள பத்தாயிரத்திற்கும் கூடுதலான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தில் இது வரை மழை வெள்ளத்தால் எட்டு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

கார்கில் போரில் இந்தியா வெற்றிபெற்றதை நினைவுகூறும் விதத்தில் ராணுவ வீரர்கள் கலந்து கொண்ட மோட்டார் சைக்கிள் பயணம் ட்டிராஸில் அமைந்துள்ள கார்கில் நினைவிடத்தை வெற்றிகரமாக சென்றடைந்தது.

நாட்டின் ஐந்து இடங்களிலிருந்து புறப்பட்ட இந்த வீரர்கள் சுமார் 17 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து ராணுவத்தினரின் தீரத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

ராணுவ வீரர்களை வடக்கு பிராந்திய தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் சுசீந்திரகுமார் வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது பேசிய அவர், 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரில் உயிர்த்தியாகம் செய்த அனைத்து ராணுவ வீரர்களுக்கும் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

இது அவர்களின் நாட்டுப்பற்றை எடுத்துரைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் அமர்நாத் குகைக் கோவிலுக்கு இன்று அதிகாலை நான்காயிரத்து 885 யாத்திரிகர்கள் பாஹூவதி நகர் முகாமிலிருந்து புறப்பட்டனர்.

இவர்கள் 191 வாகனங்களில் அனுப்பி வைக்கப்பட்டதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதில் மூவாயிரத்து 22 ஆண்கள், ஆயிரத்து 86 பெண்கள், 14 குழந்தைகள் அடங்குவர்.

**[]<<<>>>[]**

யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற நெதர்லாந்து அணிக்கு எதிராக ஆட்டத்தில் இங்கிலாந்து இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வரும் 15-ஆம் தேதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

***End of News***